**பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி.**
**முக்கிய தகவல்கள் ஆவணம்**
**இஸ்லாமிய நிதி வசதித் திட்டங்கள்**

**முக்கிய தகவல்கள் ஆவணம் – பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் மேலதிக தகவல்கள்**

பீப்பிள்ஸ் லீசிங்கிலுள்ள நாம் வழங்கும் திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றி விசாரிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளை நீங்கள் பயன்படுத்த முடியும்.

தொலைபேசி: +94 112 631631
மின்னஞ்சல்: info@plc.lk
வலைத்தளம்: https://www.plc.lk/
முகவரி: தலைமை அலுவலகம், இல.1161, மருதானை வீதி, கொழும்பு 08, இலங்கை.

நீங்கள் எந்தவொரு பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. கிளைக்கும் வார நாட்களில் மு.ப. 8.30க்கும் பி.ப. 5.15க்கும் இடையே வருகைதரலாம். உங்களுக்கு மிகச் சமீபத்திலுள்ள கிளையைக் கீழ்காணும் வலைத்தளத்திலுள்ள பட்டியலில் இருந்து கண்டறியுங்கள்.
https://www.plc.lk/branch Locator

மேலதிக தகவல்கள் மற்றும் விசாரணைகளுக்கு எமது சமூக ஊடகத் தளங்களையும் நாடலாம்.

Facebook : https://www.facebook.com/PeoplesLeasingFinancePLC,

Instagram : https://www.instagram.com/peoplesleasingandfinance,

YouTube : https://www.youtube.com/channel/UCG_bfhA3ImDP_4Wzd9GpRaA,

LinkedIn : https://www.linkedin.com/company/peoples-leasing,

Twitter : https://twitter.com/peoplesleasing,

**01.  முக்கிய தகவல்கள் ஆவணம் – இஜாரா / இஸ்லாமிய லீசிங்**

| | |
|---|---|
| **திட்டத்தின் விபரம் மற்றும் நோக்கம்** | **விபரம் :**<br>**இஜாரா / இஸ்லாமிய லீசிங்**<br><br>இஜாரா என்பது ஒரு குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளர் (குத்தகை வழங்குநர்) அச் சொத்தின் பாவனையை இன்னுமொருவருக்குக் கைமாற்றுவதாகும். இக் கைமாற்றத்திற்கென சொத்தின் பாவனையாளரிடம் (குத்தகைதாரர்) இருந்து வாடகை ஒன்று அறவிடப்படும்.<br><br>**நோக்கம்:**<br>இஜாரா லீசிங் பின்வருவனவற்றிற்காக வழங்கப்படலாம்:<br>*பதிவு செய்யப்படாத வாகனம், பதிவு செய்யப்பட்ட வாகனம், இயந்திரங்கள், உபகரணங்கள் |
| **வாடிக்கையாளருக்கான நன்மைகள்** | * இலகுவான மீளளிப்பு முறை<br>* காப்புறுதி வாடகையுடன் சேர்க்கப்படலாம் அல்லது தொடக்கத்திலேயே செலுத்தப்படலாம்<br>* சொத்தைப்  பதிலீடு செய்யலாம்<br>* வசதியை மீள அட்டவணைப்படுத்த முடியும்<br>* முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் குத்தகைதாரரை மாற்ற முடியும்<br>* மிதப்பு இலாப வீதங்களுடனான வசதியின் வழங்கலெனின், மூலதனத்தின் பகுதித் தீர்ப்பனவு அனுமதிக்கப்படும் |
| **இலக்குச் சந்தை** | *தனிநபர்கள் / தொழில் வல்லுனர்கள்<br>*நிறுவனங்கள்<br>*வியாபாரத் துறையினர் |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | * இஜாரா என்பது வழங்குதலையும் ஏற்றுக்கொள்ளுதலையும் தேவைப்படுத்தும் ஓர் ஒப்பந்தமாகும். வழங்குபவர் ஒரு குத்தகை வழங்குநராக அல்லது வாடகைக்கு விடுப்பவராகவும் ஏற்றுக்கொள்பவர் ஒரு குத்தகைதாரராக அல்லது வாடகைக்குப் பெறுபவராகவும் இருக்கலாம் அல்லது நேர்மாறாகவும் இருக்கலாம்.<br>* இஜாரா இரு தரப்பையும் பிணிப்பதாக ,ருக்கும். இந்த ஒப்பந்தத்தை எந்தவொரு தரப்பும் மற்றைய தரப்பின் சம்மதமின்றி முடிவுறுத்தவோ மாற்றிக்கொள்ளவோ முடியாது.<br>* இஜாரா செல்லுபடி உள்ளதாக அமைவதற்கு, குத்தகையில் சம்பந்தப்பட்ட சொத்து பெறுமதியுள்ள பயன்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே, விளைபயன் எதுவும் இல்லாத பொருளைக் குத்தகைக்கு விட முடியாது.<br>* குத்தகைதாரரின் வசமுள்ள இஜாரா சொத்து, குத்தகை வழங்குநரின் சார்பில் நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற முறையிலேயே குத்தகைதாரரினால் வைத்திருக்கப்படும். உரித்தாண்மை தொடர்பில் எழுகின்ற சகல பொறுப்புகளும் குத்தகை வழங்குநரையே சாரும். ஆனால், சொத்தின் பயன்பாடு தொடர்புடைய பொறுப்புகளைக் குத்தகைதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.<br><br>**தேவையான ஆவணங்கள்:**<br>(a) குத்தகைதாரரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.<br>(b) நிறுவனமாயின், பணிப்பாளர்களின் தேசிய அடையாள அட்டைப் பிரதிகள், கூட்டிணைப்பு விதிகள், படிவங்கள் 40, 41 20. ஒரு கம்பனியாயின் IFSU இலிருந்து இஜாரா வசதியைக் கோருவதற்கான பணிப்பாளர்கள் சபைத் தீர்மானம்.<br>(c) முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று (கட்டணப் பட்டியல் போன்ற ஒரு சான்று).<br>(d) அசைக்கக்கூடிய சொத்தெனின், சமீபத்தில்  பெறப்பட்ட அதன் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை. |

| | |
|---|---|
| | (e) தொழில் செய்பவரெனின், சம்பள விபரங்கள், கழிவுகள், நிகர சம்பளம், ஒய்வுபெறும் திகதி என்பவற்றை ஊர்ஜிதம் செய்து தொழில் வழங்குநர் வழங்கிய கடிதம்.<br>(f) வருமானத்தை உறுதிப்படுத்தும் சான்று ஆவணங்கள் (வங்கி விபரக்கூற்றுகள், கணக்காய்வு செய்யப்பட்ட மற்றும் முகாமைத்துவ கணக்கு அறிக்கைகள்).<br>(g) வரி செலுத்துபவரெனின், வரிக் கோப்பு இலக்கம் மற்றும் கடந்த 3 ஆண்டுகளுக்கான கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகள்.<br>(h) ஓர் ஒன்றியம் / கழகம் அல்லது சங்கமெனின், அதன் யாப்பு, IFSU இலிருந்து இஜாரா வசதியைக் கோருவதற்கான முகாமைத்துவச் சபைத் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகள்.<br>(i) ஒரு நம்பிக்கைப் பொறுப்பகமெனின், நம்பிக்கைப் பொறுப்பு உறுதிப்பத்திரம், IFSU இலிருந்து இஜாரா வசதியைக் கோருவதற்கான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபைத் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகள். |
| **சட்ட ஏற்பாடு** | 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் |
| **இலாப வீதம்** | இலாப விகிதங்கள் வாடிக்கையாளர் இடர் விபரத்தின் அடிப்படையில் 16 %க்கும் 32 %க்கும் இடைப்பட்டதாக இருக்கும். |
| **கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்** | * ஆவணப்படுத்தல் அறவீடுகள் (தபால் கட்டணம்- இ.ரூ. 2000/-3750/-, CRIB - இ.ரூ. 750/- 2,500/-, பரிசோதிப்பு - இ.ரூ. 3000/- 4500/-, RMV மேன்மிகுதி - இ.ரூ. 470/-<br>* RMV அறவீடுகள் - அரசாங்கத்தினால் விதித்துரைக்கப்பட்ட கட்டணம்<br>*காப்புறுதி அறவீடுகள்<br>* முத்திரை வரி – பெறத்தக்க மொத்தத்தில் 1%<br>• தவறுகையின் பேரிலான பின்தொடர் அறவீடுகள் ஆண்டுக்கு 24% என்ற அடிப்படையில் கணிக்கப்படும் |

- வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கையாளப்படும் நடைமுறை பற்றி அறிய, இந்த ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

**02. முக்கிய தகவல்கள் ஆவணம் – முராபஹா மற்றும் TM**

| | |
|---|---|
| **திட்டத்தின் விபரம் மற்றும் நோக்கம்** | **விபரம் :**<br><br>முராபஹா மற்றும் **TM**<br><br>விற்பனையாளர் (பீப்பிள்ஸ் லீசிங்) பொருளைப் பெறுவதற்கு உண்மையாகவே உறப்பட்ட செலவை வெளிப்படுத்துவதுடன், அதனால் சம்பாதிக்கப்படும் இலாபத் தொகையை வாங்குபவருக்கு (வாடிக்கையாளர்) அறிவிக்கும் முறையில் செயற்படுத்தப்படும் ஒரு சொத்து விற்பனை.<br>இதன் சிறப்பம்சங்கள்:<br>*விற்கப்படவிருக்கும் சொத்து உண்மையாகவே இருக்க வேண்டும்.<br>*விற்பனை விலை தீர்மானிக்கப்பட வேண்டும்.<br>*விற்பனை நிபந்தனை அற்றதாக இருக்க வேண்டும்.<br>* கொள்வனவுக் கட்டளையிடப்பட்ட முராபஹா என்பது இன்னுமொருவரின் அல்லது இன்னுமொரு நிறுவனத்தின் ஊடாகப் பொருளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஒருவரினால் அல்லது நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் கொள்வனவுக்கான முன்கூட்டிய வாக்குறுதியைக் கொண்ட முராபஹா வசதியாகும்.<br>* கொள்வனவுக் கட்டளையாளருக்கான முராபஹா மூன்று தரப்புகளைக் கொண்டிருக்கும். கொள்வனவுக் கட்டளையாளர், வாங்குபவர், விற்பவர் என்பனவே அத் தரப்புகளாகும்.<br>* கொள்வனவுக் கட்டளையாளருக்கான முராபஹா இரண்டு வெவ்வேறான விற்பனை ஒப்பந்தங்களை உள்ளடக்கியது. முதலாவது, வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையிலானது. இரண்டாவது, வாங்குபவருக்கும் கொள்வனவுக் கட்டளையாளருக்கும் இடையிலானது. இத்தகைய இரண்டு விற்பனைகளுக்கும் விற்பனையை ஆட்சி செய்யும் சகல விதிகளும் இயல்பாகவே பிரயோகிக்கப்படும். முதலாவது விற்பனை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பின்பே இரண்டாவது விற்பனை இடம்பெறும்.<br><br>**நோக்கம் :**<br>* பண்டங்களின் கொள்வனவு<br>* சொத்துக்களின் கொள்வனவு<br>* வர்த்தக நோக்கத்திற்கான பண்டங்களின் கொள்வனவு<br>* பதிவு செய்யப்படாத வாகனம்<br>* பதிவு செய்யப்பட்ட வாகனம்<br>* இயந்திரங்கள் |
| **வாடிக்கையாளருக்கான நன்மைகள்** | * நெகிழ்வான மீளளிப்பு முறை<br>* பிணையை மாற்றீடு செய்ய முடியும் |
| **இலக்குச் சந்தை** | *நிறுவனங்கள்<br>*வியாபாரத் துறையினர்<br>* தனிநபர்கள் |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | **தேவையான ஆவணங்கள்**:<br>(a) வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.<br>(b) நிறுவனமாயின், பணிப்பாளர்களின் தேசிய அடையாள அட்டைப் பிரதிகள், கூட்டிணைப்பு விதிகள், படிவங்கள் 40, 41 மற்றும் 20, IFSU இலிருந்து கொள்வனவுக் கட்டளையின் பேரில் முராபஹா வசதியைக் கோருவதற்கான பணிப்பாளர்கள் சபைத் தீர்மானம்.<br>(c) வசிப்பிட முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று.<br>(d) தொழில் செய்பவரெனின், சம்பள விபரங்கள், கழிவுகள், நிகர சம்பளம், ஒய்வுபெறும் திகதி என்பவற்றை ஊர்ஜிதம் செய்து தொழில் வழங்குநர் வழங்கிய |

| | |
|---|---|
| | கடிதம்.<br>(e) வருமானத்தை உறுதிப்படுத்தும் சான்று ஆவணங்கள் (வங்கி விபரக்கூற்றுகள், கணக்காய்வு செய்யப்பட்ட மற்றும் முகாமைத்துவ கணக்கு அறிக்கைகள்).<br>(f) வரி செலுத்துபவரெனின், வரிக் கோப்பு இலக்கம் மற்றும் கடந்த 3 ஆண்டுகளுக்கான கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகள்.<br>**(g)** ஒரு நம்பிக்கைப் பொறுப்பகமெனின் அதன் யாப்பு மற்றும் IFSU இலிருந்து கொள்வனவுக் கட்டைளையாளருக்கான முராபஹா வசதியைக் கோருவதற்கான முகாமைத்துவச் சபைத் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகள்.<br>(h) வாடிக்கையாளர் விபரப் பரிசோதிப்பு (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் |
| **சட்ட ஏற்பாடு** | 1990ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க அடைமானச் சட்டம் |
| **இலாப வீதம்** | இலாப விகிதங்கள் வாடிக்கையாளர் இடர் விபரத்தின் அடிப்படையில் 19.25% -30% ஆக இருக்கும். |
| **கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்** | முராபஹா வாகனம்<br>* ஆவணப்படுத்தல் அறவீடுகள் ((தபால் கட்டணம் - இ.ரூ. 2000/- 3750/-, CRIB - இ.ரூ. 750/- 2,500/-, பரிசோதிப்பு - இ.ரூ. 3000/- 4500/-, RMV மேன்மிகுதி - இ.ரூ. 470/-<br>* முத்திரை வரி – 0.1%, ஏற்புடையதாயின் மட்டும்<br>* RMVஅறவீடுகள் - அரசாங்கத்தினால் விதித்துரைக்கப்பட்ட கட்டணம், ஏற்புடையதாயின்<br>*காப்புறுதி அறவீடுகள் வர்த்தக முராபஹா<br>*பிணை ஓர் அசையாச் சொத்தாக இருந்தால், அடைமான அறவீடுகள் மற்றும் சட்ட அறவீடுகள்<br>* சொத்து பரிசோதிப்பு அறவீடுகள் - இ.ரூ 6000/- 23000/-<br>* தவறுகையின் பேரிலான பின்தொடர் அறவீடுகள் ஆண்டுக்கு 24% என்ற அடிப்படையில் கணிக்கப்படும் |

- வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கையாளப்படும் நடைமுறை பற்றி அறிய, இந்த ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

**03. முக்கிய தகவல்கள் ஆவணம் – முஷாரகா**

| | |
|---|---|
| **திட்டத்தின் விபரம் மற்றும் நோக்கம்** | **விபரம் :**<br><br>முஷாரகா என்பது பங்காளித்துவ அடிப்படையில் இலாபம் மற்றும் நட்டத்தைப் பகிர்ந்துகொள்ளும் ஓர் ஒப்பந்தமாகும். இதில் பங்குகொள்ளும் தரப்பினர், ஷரிஆவுக்கு அமைவான ஒரு வேலைத்திட்டத்திற்கான நிதியிடல் மற்றும் முகாமைத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்வார்கள். இது ஒரு பொருளின் அல்லது சொத்தின் கூட்டு உரித்தாண்மையாகும். கூட்டு உரிமையாளர்களில் ஒருவர் பொருளில் அல்லது சொத்தில் மற்றைய உரிமையாளர் கொண்டுள்ள பங்கினைப் படிப்படியாகக் கொள்வனவு செய்து, இறுதியாக அப் பொருளின் அல்லது சொத்தின் முழு உரிமையையும் தனதாக்கிக் கொள்வதற்கு ஒப்புக்கொள்ள / வாக்களிக்குறுதியளிக்க வேண்டும்.<br><br>**நோக்கம்**:<br>* பதிவு செய்யப்படாத மற்றும் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள<br>*இயந்திர சாதனங்கள்<br>*தொழிற்படு மூலதனத் தேவை, வீடு /காணி கொள்வனவு |
| **வாடிக்கையாளருக்கான நன்மைகள்** | * நெகிழ்வான மீளளிப்பு முறை<br>* பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்<br>* இயந்திர சாதனங்கள்<br>* தொழிற்படு மூலதனத் தேவை,<br>* வீடு /காணி ஆதனக் கொள்வனவு |
| **இலக்குச் சந்தை** | *நிறுவனங்கள்<br>*வியாபாரத் துறையினர்<br>* தனிநபர்கள் |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | **தேவையான ஆவணங்கள்**:<br>(a) முஷாரகா விண்ணப்பப் படிவம். இது வாடிக்கையாளரினால் நிரப்பப்பட்டுக் கையொப்பமிடப்பட வேண்டும். இது IFSU ஊழியர்களினால் நிரப்பப்படக் கூடாது.<br>(b) வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.<br>(c) நிறுவனமாயின், பணிப்பாளர்களின் தேசிய அடையாள அட்டைப் பிரதிகள், கூட்டிணைப்பு விதிகள், படிவங்கள் 40, 41 மற்றும் 20, IFSU இலிருந்து கொள்வனவுக் கட்டளையின் பேரில் முஷாரகா வசதியைக் கோருவதற்கான பணிப்பாளர்கள் சபைத் தீர்மானம்.<br>(d) வசிப்பிட முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று.<br>(e) அசையும் சொத்து தொடர்பில் சமீபத்தில் பெறப்பட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை.<br>(f) தொழில் செய்பவரெனின், சம்பள விபரங்கள், கழிவுகள், நிகர சம்பளம், ஒய்வுபெறும் திகதி என்பவற்றை ஊர்ஜிதம் செய்து தொழில் வழங்குநர் வழங்கிய கடிதம்.<br>(g) வருமானத்தை உறுதிப்படுத்தும் சான்று ஆவணங்கள் (வங்கி விபரக்கூற்றுகள், கணக்காய்வு செய்யப்பட்ட மற்றும் முகாமைத்துவ கணக்கு அறிக்கைகள்).<br>(h) வரி செலுத்துபவரெனின், வரிக் கோப்பு இலக்கம் மற்றும் கடந்த 3 ஆண்டுகளுக்கான கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகள்.<br>ஒரு சங்கம் / கழகம் அல்லது மன்றமெனின், அதன் யாப்பு, IFSU இலிருந்து முஷாரகா வசதியைக் கோருவதற்கான முகாமைத்துவச் சபைத் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகள்.<br>(i) ஒரு நம்பிக்கைப் பொறுப்பகமெனின் அதன் யாப்பு மற்றும் IFSU இலிருந்து முஷாரகா வசதியைக் கோருவதற்கான முகாமைத்துவச் சபைத் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகள். |

| | |
|---|---|
| | **வீடு அல்லது காணி தொடர்பான ஆவணங்கள்**:<br><br>a) பிணையாகச் சமர்ப்பிக்கப்படும் சொத்தின் குறைந்தபட்சம் 25 ஆண்டுகால உரிமையைப் பரிசீலிப்பதற்காக, நில அளவைப் படம் மற்றும் காணி உறுதியின் பிரதி.<br>b) காணி உறுதியின் பிரதியுடன், கடந்த 25 ஆண்டுகளுக்கென மாவட்டக் காணிப் பதிவகத்திலிருந்து பெறப்பட்ட இடையூறுகள் விபரம்.<br>c) உள்ளூராட்சி அதிகார சபையிடமிருந்து பின்வரும் ஆவணங்கள்:<br>-உரிமை மாற்றமில்லை என்பதற்கான சான்றிதழ்<br>-வீதி எல்லைகள் / கட்டட எல்லைகள் சான்றிதழ்<br>-உரித்தாண்மைச் சான்றிதழ்<br>-சொத்துக்காகச் செலுத்தப்பட்ட வரிகள் / கடன் தொடர்பான பற்றுச்சீட்டுகள்<br>d) ஒரு கொள்வனவுக்காகவெனின், சொத்தை விற்பதற்குத் தற்போதய உரிமையாளர் வழங்கிய சம்மதக் கடிதம், இணங்கப்பட்ட விலை, செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் நிபந்தனைகள், ஏதுமிருப்பின்<br>e) ஒரு நிர்மாணிப்புக்காகவெனின், தொகை மதிப்புப் பட்டியல் / அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம் |
| **சட்ட ஏற்பாடு** | 1990ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க அடைமானச் சட்டம் |
| **இலாப வீதம்** | இலாப விகிதங்கள் வாடிக்கையாளர் இடர் விபரத்தின் அடிப்படையில் 19.25%க்கும் 30.00 % க்கும் இடைப்பட்டதாக இருக்கும். |
| **கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்** | * ஆவணப்படுத்தல் அறவீடுகள் ((தபால் கட்டணம் - இ.ரூ. 2000/- 3750/-,<br>CRIB - இ.ரூ. 750/- 2,500/-, பரிசோதிப்பு - இ.ரூ. 3000/- 4500/-, RMV மேன்மிகுதி - இ.ரூ. 470/-<br>* முத்திரை வரி – 0.1%<br>* RMVஅறவீடுகள் - அரசாங்கத்தினால் விதித்துரைக்கப்பட்ட கட்டணம், ஏற்புடையதாயின்<br>*காப்புறுதி அறவீடுகள்<br>*வசதியின் பெறுமதி அடிப்படையில் ஒரு சேவைக் கட்டணம் / செயற்படுத்தல் கட்டணம் - இ.ரூ. 2000/- 10,000/-,<br>*வாகன சொத்து பரிசோதிப்பு அறவீடுகள் - இ.ரூ 6000/- 23000/-<br>* அடைமான முறி பதிவுக் கட்டணம்<br>* தவறுகையின் பேரிலான பின்தொடர் அறவீடுகள் ஆண்டுக்கு 24% என்ற அடிப்படையில் கணிக்கப்படும் |

- வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கையாளப்படும் நடைமுறை பற்றி அறிய, இந்த ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

**04. முக்கிய தகவல்கள் ஆவணம் - PLC வாடிஆ (இஸ்லாமிய தங்க வாய்ப்பு சேவை)**

| | |
|---|---|
| **திட்டத்தின் விபரம் மற்றும் நோக்கம்** | உங்கள் பணத் தேவைகளுக்கு விரைவான, வசதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள, வாடிஆ தங்கப் பாதுகாப்பு வைப்பு வசதி ஒன்றிற்கு விண்ணப்பிப்பதன் மூலம் உங்கள் தங்கப் பாதுகாப்பு வைப்புச் சான்றிதழை அதிகபட்ச பெறுமதிக்காகப் பயன்படுத்துங்கள்.<br><br>**நோக்கம்:**<br><br>அவசர பணத் தேவைகளின்போது நிதித் தீர்வை வழங்கும். |
| **வாடிக்கையாளருக்கான நன்மைகள்** | -உங்கள் தங்கப் பாதுகாப்பு வைப்புச் சான்றிதழுக்கு அதிகூடிய கடன் முற்பணம். இஸ்லாமிய தங்கக் கடன் வசதிச் சந்தையில் எதிர்பார்க்கக்கூடிய மிகக் குறைந்த வீதங்களிலான பாதுகாப்பு வைப்பு அறவீட்டை PLC வாடிஆ கொண்டுள்ளது.<br><br>-மறைமுக / மேலதிக கட்டணங்கள் எதுவுமே கிடையாது. உங்கள் வசதிக்கேற்ப முற்பணத்தையும் பாதுகாப்பு வைப்பு அறவீடுகளையும் இலகுவான தவணைகளில் மீளளிக்கலாம்.<br>- தங்கப் பாதுகாப்பு வைப்பு வசதிக் காலம் 10 நாட்கள்/30 நாட்கள்/60 நாட்கள் / 90 நாட்கள் / 180 நாட்கள் / 365 நாட்கள்<br>- உங்கள் தங்க நகைகளுக்கு தக்காஃபுல் காப்புறுதி இலவசமாக வழங்கப்படும்.<br>-காலப்பகுதியின் முடிவில் குறைந்தபட்ச தொகையைச் செலுத்துவதன் மூலம் பாதுகாப்பு வைப்புக் காலத்தை நீடிக்க முடியும்.<br>-நீங்கள் எம்மிடம் பல கடன் வசதிகளைப் பெற்றிருந்தாலும் ஒவ்வொரு தங்க நகையாக மீட்டுக்கொள்ளலாம்.<br>-நன்கு பயிற்றப்பட்ட, அனுபவம் வாய்ந்த, நட்புறவான அலுவலர்கள் உங்களுக்குச் சேவை அளிப்பார்கள்.<br>- முதிர்ச்சித் திகதிக்கு முன் உங்களுக்கு SMS மூலம் அறிவிக்கப்படும். |
| **இலக்குச் சந்தை** | இச் சேவை முதலீட்டு மற்றும் சிற்றளவு தங்கக் கடன் வாடிக்கையாளர் கூறுகள் இரண்டிற்கும் உகந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆபரணத் தயாரிப்பாளர்கள். நகைக் கடை உரிமையாளர்கள், வியாபாரத் துறையினர் ஆகியோரும் இக் கூறுகளில் அடங்குவர். |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | -நகையின் தங்கக் கலவை 16 கரட் அல்லது 67% தூய்மைக்குக் குறைவாக இருக்கக்கூடாது. தங்க நாணயங்கள், தங்க பிஸ்கட்கள், தங்கப் பாளங்கள், “Katty” அல்லது“moozed gold” என்பனவும் மிகுந்த கவனத்துடனும் உரிய அவதானத்துடனும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>-வாடிஆ பாதுகாப்பு வைப்பு விண்ணப்பம் மற்றும் தங்கக் கடன் அடைமான முறி<br><br>-தேசிய அடையாள அட்டையின் பிரதி |
| **சட்ட ஏற்பாடு** | 1990ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க அடைமானச் சட்டம் |
| **அறவீடுகள்** | பாதுகாப்பு வைப்பு அறவீடுகள் வாடிக்கையாளர் இடர் விபரத்தின் அடிப்படையில் 11.00 % க்கும் 16.50 % க்கும் இடைப்பட்டதாக இருக்கும். |

## முறைப்பாடு கையாளல் செயன்முறை

***வாடிக்கையாளர்களுக்கு முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பின்வரும் முறைகள் காணப்படுகின்றன.***

- *சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளரினூடாக*
- *நேரடியாக முறைப்பாடளித்தல் – வாடிக்கையாளர் ஒருவர், பணி நேரத்தில் நேரடியாக, இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08 எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தின், வாடிக்கையாளர் சேவை மற்றும் முரண் தீர்த்தல் பிரிவில், கடிதம் மூலமாக முழு விபரங்களையும் சமர்ப்பித்து முறைப்பாட்டை பதிவு செய்யலாம்.*
- *மின்னஞ்சல்:* customerservices@plc.lk
- *அழைப்பு நிலையத்தினூடாக* (0112206300)
- *தபால் மூலமாக: வாடிக்கையாளர் சேவை மற்றும் முரண் தீர்த்தல் பிரிவு, இல.* 1161, *மருதானை வீதி, கொழும்பு* 08.
- *கீழே தரப்பட்டுள்ள* link/path *ஊடாக சமர்ப்பிப்பு படிவத்தை பதிவிறக்கம் செய்யவும்.*

https://www.plc.lk/wp-content/uploads/2023/02/Customer-Complaint-Grievance-Handling-Form.pdf

www.plc.lk ---> Quick Links ----> Stakeholder Feedback ----> Complaint & Grievances ----> Complaint & Grievances Submission Form (Download)

*நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனத்தினால் திருப்திகரமான தீர்வு வழங்கப்படாவிடின், கீழே தரப்பட்டுள்ள வெளியக முரண் தீர்த்தல் திட்டங்களுக்கு தமது விடயத்தை கொண்டு செல்ல முடியும்;*

***நிதிசார் நுகர்வோர் உறவுகள் திணைக்களம்* (FCRD)**

*பணிப்பாளர்*
*நிதிசார் நுகர்வோர் உறவுகள் திணைக்களம்* (FCRD)
*இலங்கை மத்திய வங்கி* (CBSL),
No 30,
*ஜனாதிபதி மாவத்தை,*
*கொழும்பு* 01.

*தொலைபேசி:* 011 247 7966
*கோரிக்கைகளுக்கான ஹொட்லைன்:* 1935
*ஃபக்ஸ்* : +94 11 247 7744
*மின்னஞ்சல்* : fcrd@cbsl.lk
*இணையம்* : https://www.cbsl.gov.lk/en/fcrd

***நிதிசார் குறைகேள் அதிகாரி***

*நிதிசார் குறைகேள் அதிகாரி,*
143A, *வஜிர வீதி,*
*கொழும்பு* 05.

*தொலைபேசி:* 011 259 5624
*ஃபக்ஸ்:* (+94)11 259 5625
*மின்னஞ்சல்:* fosril@sltnet.lk
*இணையம்:* www.financialombudsman.lk